DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. C.Rajasekar, B.A, B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No.28/2021**

**CNR.No: TNTH06-0000046 -2021 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : **நிர்மலாசிவாஜி** | Town | **சென்னை** |
| Husband Name | : **ஆனந்தசிவாஜி** | Occupation | : |
| Age | : | **DW1** | |

நாள் : 15.04.2025

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) வழக்கு சொத்து எனது பெயரில் கிரையம் பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தை எனது கணவர் ஆனந்தசிவாஜி தான் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்தானது மனைபிரிவுகளாக பிரித்து விற்பனை செய்யும் நோக்கத்தில் தான் வாங்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்தை நான் கிரையம் வாங்கியபோது அது புஞ்சை நிலமாக இருந்தது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மோகனலட்சுமியின் கணவர் மாரிமுத்து எனது கணவர் ஆனந்தசிவாஜிக்கு அறிமுகமான நபர் என்றால் ஆமாம், அவர் புரோக்கர் என்ற முறையில் எனது கணவருக்கு தெரியும்.

2) மாரிமுத்து என்பவர் ராகமாலிகா எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் ஏலக்காய் வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். மாரிமுத்துவிற்கு அவரது ஊரில் வேறு பல சொத்துக்கள் சொந்தமாக இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாரிமுத்து நில புரோக்கர் வேலை செய்து வந்த நபர் அல்ல என்றால் சரியல்ல, என் கணவர் மாரிமுத்துவை நில புரோக்கர் என்று தான் சொன்னார். எனது கணவர் வழக்கு சொத்தினை பிளாட்டுகளாக பிரித்து விற்பனை செய்யும் பொறுப்பினை மாரிமுத்துவிடம் கொடுத்திருந்தார் என்றால்

சரியல்ல.

3) அதன் அடிப்படையில் தான் 1ம் பிரதிவாதி கணவர் பெயரில், எனது கணவர் வாசாஆ1 ஆவணம் எழுதியிருக்கிறார் என்றால் சரியல்ல. வாசாஆ1 ஆவணத்தில் முத்திரை வில்லையிலுள்ள கையொப்பமும், அதன்கீழ் உள்ள கையொப்பமும் எனது கணவரின் கையொப்பம் என்றால் இல்லை, அவை எனது கணவரின் கையொப்பம் இல்லை. வாசாஆ1 ஆவணத்தில் எனது கணவரால் எழுதிக்கொடுக்கப்பட்டு, அதில் எனது கணவர் கையொப்பம் செய்துள்ளார் என்றாலும், நான் வழக்கிற்காக வேண்டி உண்மையை மறைத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ1 ஆவணத்தின் படி எனது கணவர் 1ம் பிரதிவாதியின் கணவர் பெயருக்கு வழக்கு சொத்தில் 1 செண்டின் விலை ரூ.39,000/- என விலை பேசி ஒப்பந்ததேதியிலிருந்து 6 மாத காலத்தில் கிரைய தொகை செலுத்தி கிரையம் செய்து கொள்ள வேண்டி என பேசி முடித்து அன்றைய தினம் ரூ.25 லட்சம் முன் பணமாக பெற்றுக்கொண்டுள்ளார் என்றாலும் அதற்காகத்தான் வாசாஆ1 ஆவணம் எழுதிக்கொள்ளப்பட்டது என்றாலும் சரியல்ல.

4) மேற்படி 1ம் பிரதிவாதியின் கணவருக்கும், எனது கணவருக்குமான ஒப்பந்தத்தின்படி வழக்கு சொத்தினை உரிய அங்கிகாரம் பெற்ற பிறகு பிளாட்டுகளை ஒவ்வொன்றாக விற்கும்போது அதில் பாதி தொகையை எனக்கும், மீதி பாதி தொகையை மாரிமுத்துவிற்கும் பிரித்துக்கொள்வதென்றும், வாசாஆ1 ஆவணத்தின்படி செண்ட் விலை ரூ.39 ஆயிரம் வீதம் வழக்கு சொத்திற்கான முழு தொகையையும் நான் அடைந்துகொண்டபிறகு எஞ்சிய பகுதிக்கான நிலம் முழுவதையும் மாரிமுத்து பெயருக்கு கிரையம் செய்து கொடுப்பது என பேசிக்கொள்ளப்பட்டது என்றால் அது உண்மையல்ல.

5) வாசாஆ1 ஆவணத்தின் அடிப்படையில் தான் மாரிமுத்து வழக்கு சொத்திற்கு பிளாட் அப்ரூவல் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளையும் செய்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பள்ளமாக இருந்த நிலையில் அதனை மாரிமுத்து தான் மணல் நிரப்பி ரூ.45 லட்சம் வரை செலவு செய்து அதனை நேராக்கி

அதில் ராகமாலிகா எண்டர்பிரைசஸ் என்ற பெயர் எழுதப்பட்ட கல்கால் நட்டு டைமண்ட் இரும்பு கம்பி வேலி அமைக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதேபோல எனது கணவர் எப்போதெல்லாம் சென்னையிலிருந்து கூடலூருக்கு வரும்போதெல்லாம் 2012-2018 ம் ஆண்டு வரை மாரிமுத்துவிடமிருந்து ரூ.25 லட்சம் வரை பல தவணைகளாக பெற்றிருக்கிறார் என்று சொன்னால் அது உண்மையல்ல.

6) மாரிமுத்து 2018 ம் ஆண்டில் 18 ற்கும் மேற்பட்ட அரசு துறைகளிலிருந்து வழக்கு சொத்தினை பிளாட்டுகளாக மாற்றுவதற்கு தடையில்லாத சான்று பெற்றார் என்றால் சரியல்ல. அவ்வாறு, மாரிமுத்து தடையில்லாத சான்று பெற்றதற்கான ஆவணங்களைத்தான் வாசாஆ 4 முதல் வாசாஆ 20 வரையிலான ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் முன் காட்டப்படும் புகைப்படங்களில் வழக்கு சொத்தில் கல்கால் நடப்பட்டுள்ளது என்றால் அந்த புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ளது போல கல்கால் எதுவும் வழக்கு சொத்தில் நடப்படவில்லை. மேற்படி புகைப்படங்களில் கண்டது போல வழக்கு சொத்தில் கல்கால் நடப்பட்டுள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக வேண்டி அதனை மறைத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) வழக்கு சொத்தில் கல்கால் அமைக்கப்பட்டுள்ள விபரம் பிவாசாஆ 8 ஆவணத்தில் வெளிப்படுகிறது என்று சொன்னால் ஆமாம், இந்த ஆவணத்தில் உள்ள கல்கால்கள் நாங்கள் ஊன்றிய கல்கால்கள் ஆகும். வாசாஆ 1 முதல் வாசாஆ 20 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் மாரிமுத்து வழக்கு சொத்தினை பிளாட்டுகளாக மாற்றி அங்கீகாரம் பெறுவதற்கு எடுத்து நடவடிக்கையை காண்பிக்கும் ஆவணங்கள் என்றாலும், அதனால் நான் கூறுவதுபோல நில தரகராக உள்ள நபரிடம் இதுபோன்ற ஆவணங்கள் இருந்து வருவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. என் முன் காட்டப்படும் வாசாஆ 15 ஆவணமான நகர ஊரமைப்பு ஆணையரால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்பதல் வரைபடம் நான் கூறுவதுபோல தரகராக உள்ள நபரிடம் இருக்க வாய்ப்பில்லை என்றாலும், அதனால் மாரிமுத்து தரகராக இருந்தார் என நான் கூறும் சாட்சியம் பொய்யானது என்றால்

சரியல்ல.

8) அதேபோல வாசாஆ 15 அங்கீகார வரைபடமானது 1ம் பிரதிவாதியின் கணவர் மாரிமுத்துவின் விலாசத்திற்கு தான் அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ 15 அஞ்சல் உறையின் முகவரி விபரங்களுக்கு முரணாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முத்துக்குமரன் என்பவர் மாரிமுத்துவின் முகவரியை மாற்றி வைத்து வாசாஆ 15 ஆவணத்தை மாரிமுத்துவின் முகவரிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தார் என எங்கள் தரப்பில் முன் வைக்கும் எதிர்வாதம் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ 2 முதல் வாசாஆ 15 வரையிலான ஆவணங்கள் அனைத்துமே வழக்கு சொத்து சம்பந்தமானது என்றாலும், அந்த ஆவணங்கள் அனைத்தும் வழக்கு சொத்து தொடர்பாக அங்கிகாரம் பெற மாரிமுத்துவால் எடுக்கப்பட்ட நடவடிக்கை காரணமாக மாரிமுத்து வசம் உள்ளது என்றாலும் நாங்கள் நடவடிக்கை எடுத்திருந்தால் எங்கள் வசம் தான் இருந்திருக்கும் என்றாலும் சரியல்ல.

9) மாரிமுத்து 2018ம் ஆண்டில் வழக்கு சொத்திற்கு மனைபிரிவு அங்கிகாரம் பெற்ற பிறகு எனது கணவர் ஏமாற்ற முயற்சிக்கிறார் என்பதை அறிந்து ராகமாலிகா எண்டர்பிரைசஸ் என்ற வங்கி கணக்கிலிருந்தும், மாரிமுத்துவின் தனிப்பட்ட வங்கி கணக்கிலிருந்தும் மொத்தம் ரூ.19 லட்சம் தொகையை எனது கணவர் பெயருக்கும், எனது கணவரின் அங்கிகாரம் பெற்ற நபரான செந்தூர் ராஜ் மற்றும் எனது பெயருக்கும் செலுத்தப்பட்டது என்றால் வழக்கு சொத்திற்காக மேற்படி தொகை அனுப்பப்படவில்லை, வேறொரு இடத்திற்காகத்தான் அனுப்பப்பட்டது. மேற்படி தொகை வழக்கு சொத்திற்காகத்தான் செலுத்தப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ரூ.19 லட்சம் தொகை செலுத்தப்பட்டதற்கான ஆதாரம் வாசாஆ 20 ஆவணத்தில் புலப்படுகிறது என்றால் சரியல்ல.

10) வேறொரு இடத்திற்காக தொகை செலுத்தப்பட்டதாக கூறும் வேறொரு இடம் எங்கு உள்ளது என்றால் வழக்கு சொத்தை ஒட்டி அமைந்துள்ள 85 செண்ட் நிலமாகும். மேற்படி 85 செண்ட் நிலம் யார் பெயரில் உள்ளது என்றால் எனது

கணவர் பெயரில் வாங்கப்பட்ட சொத்தாகும். மேற்படி 85 செண்ட் நிலம் எனது கணவர் பெயரில் வாங்கப்பட்டது என்பதை காண்பிக்கும் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம், தாக்கல் செய்துள்ளேன். நான் கூறும் 85 செண்ட் நிலமானது மாரிமுத்துவால் அவரது தனிப்பட்ட பணத்தை வைத்து மாரிமுத்து பெயரில் வாங்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல, அந்த சமயத்தில் எனது கணவர் உடல்நலம் சரியில்லாமல் இருந்த காரணத்தினால் நாங்கள் நிலத்திற்கான தொகையை செலுத்தியபோதிலும் 85 செண்ட் நிலத்தை மாரிமுத்து பெயரில் கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்டது.

11) நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், மேற்படி 85 செண்ட் நிலத்தை மாரிமுத்து அவரது சொந்த பணத்தை வைத்து கிரையம் பெற்றார் என்றாலும், அந்த கிரைய ஆவணம் பிவாசாஆ 2 ஆவணம் என்றாலும் சரியல்ல. மேற்படி 85 செண்ட் நிலத்திற்கு தான் மாரிமுத்து ரூ.19 லட்சத்தை எங்களுக்கு செலுத்தியதாக சொல்கிறேனா என்றால் ஆமாம். பிவாசாஆ 2 ஆவண சொத்தானது ரூ.1,90,000/–ம் மட்டுமே மதிப்பு சொத்து என்றாலும், நான் கூறுவது போல அதற்கு ரூ.19 லட்சம் செலுத்தப்பட்டது என்பது பொய்யான சாட்சியம் என்றால் சரியல்ல. மேற்படி 85 செண்ட் சொத்து பின்புறமாக இருப்பதால் அதற்கு மதிப்பு குறைவு என்றாலும், அதைத்தான் மாரிமுத்து இறந்தபிறகு அவரது வாரிசுகள் முத்துக்குமரன் பெயரில் கிரையம் எழுதிக்கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல.

12) 2018 ம் ஆண்டில் மாரிமுத்து பிளாட் அங்கிகாரம் வாங்கிய பிறகு வாசாஆ 1 ஆவணத்தின்படி நடக்கமுடியாது என மறுத்தும், மாரிமுத்து கூறும் நபரின் பெயரில் கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொடுக்க முடியாது என மறுத்தும், வழக்கு சொத்திலுள்ள வீட்டில் இருந்த பீரோவிலிருந்த அசல் ஆவணங்களை எனது கணவரும், 2 ம் பிரதிவாதியும் சேர்ந்து எடுத்து சென்றுவிட்டனர் என்றாலும் சரியல்ல, அவை அனைத்தும் பொய்யாகும். எனது கணவருக்கும், மாரிமுத்துவிற்கும் பிரச்சனை ஏற்பட்ட பிறகு வழக்கு சொத்திலிருந்து மாரிமுத்துவை வெளியேற்ற எனது கணவர் பொது மனிதர்கள் மூலம் நடவடிக்கை எடுத்தார் என்றால் சரியல்ல.

அதனால் மனவேதனை அடைந்த மாரிமுத்து கடந்த 2019ம் ஆண்டில் மாரடைப்பால் இறந்து விட்டார் என்றால் சரியல்ல.

13) பிறகு, 1ம் பிரதிவாதி 24.06.2020 மற்றும் 02.07.2020 ஆகிய தேதிகளில் எனது கணவர் மற்றும் என் மீதும் தேனி மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்து அதன் பேரில் என்னையும், எனது கணவரையும் கூடலூர் காவல்நிலையத்தில் விசாரித்தார்கள் என்று சொன்னால் அது மேற்படி 85 செண்ட் நிலம் தொடர்பான பிரச்சனைக்காக விசாரித்தார்கள். மேற்படி விசாரணையின்போது நான் 1கோடியே 60லட்சம் தொகையை மோகனலட்சுமிடம் கொடுத்து அவரிடமிருந்து மேற்படி 85 செண்ட் சொத்தினை திரும்ப பெற்றுக்கொள்வதென்று பேசி முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல, மேற்படி விசாரணையானது 85 செண்ட் சொத்து தொடர்பாக மட்டுமே நடைபெற்றது. நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், மேற்படி விசாரணையின்போது நான் 1கோடியே 60லட்சம் தொகையை மோகனலட்சுமிடம் கொடுத்து அவரிடமிருந்து மேற்படி 85 செண்ட் சொத்தினை திரும்ப பெற்றுக்கொள்வதென்று எனது கட்டாயத்தின்பேரில் தான் பேசி முடிக்கப்பட்டது என்றாலும், நான் வழக்கிற்காக அதனை மறுத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

14) கூடலூர் காவல்நிலையத்தில் விசாரணையின்போது எழுதிக்கொடுத்த வாக்குமூலம் தொடர்பான உரிய சாட்சிகளை விசாரிப்பதில் எனக்கு ஆட்சேபனை ஏதேனும் உண்டா என்றால் இல்லை. 27.01.2021ல் கூடலூர் காவல்நிலையத்தில் என் மீதும், என் மகன் மீதும் 1ம் பிரதிவாதி புகார் அளித்தார் என்றால் ஆமாம், கொடுத்தார். மேற்படி புகாரின் பேரில் என் மகன் காவல்நிலையத்தில் ஆஜராகி 6 மாதகாலம் தொகை செலுத்துவதற்கு அவகாசம் வாங்கி சென்றார் என்றாலும், ஆனால் அதன்படி என் மகன் தொகை எதுவும் செலுத்தவில்லை என்றாலும் சரியல்ல. மாரிமுத்து கிட்டத்தட்ட ரூ,4–1/2கோடி வரை செலவு செய்து வழக்கு சொத்திற்கு வீட்டு மனை அங்கீகாரம் பெற்றபிறகு அவரை ஏமாற்றி மோசடி செய்யும் எண்ணத்தில் வழக்கு சொத்திலிருந்து நாங்கள் வெளியேற்ற நாங்கள் முயற்சித்தோம்

என்று சொன்னால் சரியல்ல.

15) வாசாஆ 1 ஆவணத்தின் அடிப்படையில் நாங்கள் நடக்க வேண்டுமென உத்தரவிடுமாறு 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்கோருரிமை வழக்கு அனுமதிக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. எங்களால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்பதால் தான் அதனை நான் வாபஸ் பெற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நானும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்துகொண்டு இவ்வழக்கில் எதிர்வாதம் செய்வது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிவுற்றது)**

**(2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் தங்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்துள்ளார்)**

(ஒ.ம்) C. ராஜசேகர், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.